# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 25

# கால தீர்க்கதரிசனத்தை புரிந்து கொள்ளுவதற்கான திறவுகோல்கள்




Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## கால தீர்க்கதரிசனத்தை புரிந்து கொள்ளுவதற்கான திறவுகோல்கள்




கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் கால தீர்க்கதரிசனங்களைப்புரிந்து கொள்ள உதவும் திறவுகோல்கள் என்ற தலைப்பில் மிக முக்கியமான இரண்டு திறவுகோல்களைக்குறித்து ஆராயலாம்.

முதலாவதாக, **தீர்க்கதரிசனம்** என்றால் என்ன? என்று பார்ப்போம். இனி வருங்காரியங்களையோ, சம்பவங்களையோ முன்கூட்டியே தேவனால் வெளிப்படுத்தப்படுதல் தீர்க்கதரிசனமாகும்.

**ஏசாயா 46:10**

'அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வமுதற்கொண்டும் அறிவிக்கிறேன், என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி.."

ஆனால் **கால தீர்க்கதரிசனம்** என்பது, தேவனுடைய யுகங்களைப் பற்றின மாபெரும் தெய்வீக திட்டத்தில், குறிப்பிட்ட நாளையோ, காலகட்டத்தையோ வெளிப்படுத்துவதாகும் -

**யோபு 24:1**

'சர்வ வல்லவருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க, அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன?"

இந்த கால தீர்க்கதரிசனங்கள் தீர்க்கதரிசனமொழியில் - அதாவது தீர்க்கதரிசன நடைமுறையில் வெளியாக்கப்பட்டுள்ளது. அதோடுகூட, அந்த தீர்க்கதரிசன நியமத்தின்படி கணக்கிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கால தீர்க்கதரிசனங்களை ஆராய்வதனால் தேவ திட்டங்களைப் புரிந்துகொள்வதற்குப் பேருதவியாயிருக்கும்.

வேத வசனங்களில் கால தீர்க்கதரிசனங்கள் அநேகம் உள்ளன. அவற்றுள் சில -

1. **வெளிப்படுத்தல்12:6,14 மற்றும் 13:5**

2. தானியேல் 12:11மற்றும் 12:12

3. தானியேல் 8:14.. போன்றவையாகும்.

இன்று நாம் கால தீர்க்கதரிசனங்களில் இரண்டினை ஆராய்ந்து, இதன் திறவுகோல்களில் சிலவற்றை புரிந்துகொள்ள இருக்கிறோம். அவை வருமாறு

- 1. தானியேல்9:25-27 ல் கூறப்பட்டிருக்கிற “70 வாரங்கள்”
- 2. லூக்கா 21:24ல் காணப்படுகிற ‘புறஜாதியாரின் காலங்கள்”

## 1. 70வாரங்கள் குறித்த தீர்க்கதரிசனம்






நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகை குறித்த விபரங்களைக்கொண்ட ஒரே தீர்க்கதரிசனமாக இது உள்ளது. இந்த தீர்க்கதரிசன வசனங்களை நாம் வாசிக்கலாம் -

**தானியேல் 9:25-27**

‘இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும் அறுபத்திரண்டு வாரமும் செல்லும். அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும். ஆனாலும், இடுக்கமான காலங்களில் இப்படியாகும். அந்தஅறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப் போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம் போல இருக்கும். முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. அவர் ஒரு வாரமளவும் அநேகருக்குஉடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதிசென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்.அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்”



இந்த வசனப் பகுதியில் பின்வரும் வாக்கியத்தை நாம் காண்கிறோம்..

எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் 7வாரமும் 62 வாரங்களும் செல்லும்

= 7+ 62 = 69 வாரங்கள்

'அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்.." (69 வாரங்களுக்குப் பின்) 'அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவா்ா

இவை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறிக்கும் ஒரே கால தீர்க்கதரிசனமாகும்.

இந்த கால தீர்க்கதரிசனம் துவங்கும் இடத்தை நாம் கவனமாக ஆராய்வோம் -

எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல் .." -இது எருசலேமின் வீதிகள் மற்றும் அலங்கங்கள் மீண்டும் கட்டப்படுவதை குறிக்கிறது. மாறாக, எருசலேமிலுள்ள ஆலயம் கட்டப்படுவதை குறிக்காது (வசனம் 25)

ஆகவே இதைப் புரிந்து கொண்டவர்களாக, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை எது என்றும், அது பிறப்பிக்கப்பட்ட வருடத்தையும் நாம் கண்டுபிடிக்கலாம்.இப்பொழுது, எருசலேமில் உள்ள ஆலயத்தை மீண்டும் எடுப்பித்து கட்டுவதற்கான கட்டளையை கோரேஸ் ராஜா பிறப்பித்தார்

**2நாளாகமம் 36:23**

'அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும். அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று, தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணினான்"



இது பாபிலோனில் சிறைப்பட்டிருந்த இஸ்ரயேலர்கள் விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பிச்செல்ல அனுமதிக்கப்பட்ட வருடமாகிய கிமு 536 ஆகும்.

ஆனால் ஆலயத்தை எடுப்பித்துக் கட்டுவதற்கான இந்தக் கட்டளை உடனே நிறைவேற்றப்படாமல், வெகுகாலத்திற்குப் பின்பே நிறைவேற்றப்பட்டது.

பிறப்பிக்கப்பட்டிருந்த அந்தக் கட்டளைச் சுருள் காணாமற்போய், சில நாட்களுக்குப்பின்பு கண்டுபிடிக்கப்பட்டு, அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டதை வாசிக்கிறோம் -

**எஸ்ரா6: 1-3**

'அப்பொழுது ராஜாவாகிய தரியு இட்ட கட்டளையின்படியே பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்திர அறையைச் சோதித்தார்கள். மேதிய சீமையிலிருக்கிற அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே ஒரு சுருள் அகப்பட்டது. அதிலே

எழுதியிருந்த விபரமாவது -ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்தில், கோரேஸ் ராஜா எருசலேமிலிருந்த தேவாலயத்தைக் குறித்துப் பிறப்பித்த உத்தரவு என்னவென்றால் - தேவாலயமானது பலிசெலுத்தப்பட்டு வந்த ஸ்தானத்திலே கட்டப்படக் கடவது, அதின் அஸ்திபாரங்கள் பலமாயிருப்பதாக, அது அறுபது முழு உயரமும், அறுபது முழு அகலமுமாயிருக்கவேண்டும்"

முடிவாக, சில நாட்கள் கழித்து, ஐப்பிராத்தின்குறுக்கேஅதிகாரியாயிருந்த டட்னாய் மற்றும் உடன் அதிகாரிகளின் மூலம் கட்டப்பட்டதை வாசிக்கிறோம் -

எஸ்றா 6:12,15

**'ஆகையால் இதை மாற்றவும், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கெடுக்கவும், தங்கள் கையை நீட்டப்போகிற சகல ராஜாக்களையும் சகல ஜனங்களையும் தம்முடைய நாமத்தை அங்கே விளங்கப் பண்ணின தேவன் நிர்மூலமாக்கக்கடவர். தரியுவாகிய நாம் இந்தக் கட்டளையைக் கொடுத்தோம். இதன்படி ஜாக்கிரதையாய்ச் செய்யப்படக்கடவது என்று எழுதியனுப்பினான்"**

ராஜாவாகிய தரியு அரசாளுகிற ஆறாம் வருடம் ஆதார் என்னும் மாதம் மூன்றாம் தேதியிலே அந்த ஆலயம் கட்டி முடிந்தது. ஆனால் வெகுகாலத்திற்குப் பின்பு (கோரேஸ் மற்றும் தரியு ராஜாவுக்கு பின்பு) ..

**'அர்த்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே.."** (நெகேமியா 2:1)

எருசலேமுக்கு போவதற்கான 'கட்டளையை"நெகேமியா பெற்ற பின்பு அவர் எருசலேமின் இடிந்த மதில்களை எடுப்பித்து கட்டத் துவங்கினார். இது சம்பவித்ததைக் குறித்து வாசிப்போம்

நெகேமியா 2:1-8

'அர்த்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்ச ரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நாம் அதை எடுத்து அவருக்குக் கொடுத்தேன். நான் முன் ஒருபோதும் அவர் சமுகத்தில் துக்கமாயிருந்ததில்லை. அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து - நீ துக்க முகமாயிருக்கிறது என்ன?உனக்கு வியாதியில்லையே,இதுமனதின்துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார். அப்பொழுது நான் மிகவும் பயந்து, ராஜாவை நோக்கி - ராஜா என்றைக்கும் வாழ்க, என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றேன். அப்பொழுது ராஜ ஸ்திரீயும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ராஜா என்னைப் பார்த்து - ராஜாவுக்குச் சித்தமாயிருந்து,அடியேனுக்கு உமது சமுகத்தில் தயை கிடைத்ததானால், என் பிதாக்களின்கல்லறைகளிலிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி யூதா தேசத்துக்குநீர் என்னை அனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேன் என்றேன். அப்பொழுது ராஜஸ்திரீயும்

பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ராஜா என்னைப் பார்த்து - உன் பிரயாணம் எத்தனை நாள் செல்லும் , நீ எப்பொழுது திரும்பி வருவாய் என்று கேட்டார். இவ்வளவுகாலம் செல்லுமென்று நான் ராஜாவுக்குச் சொன்னபோது , என்னைஅனுப்ப அவருக்குச் சித்தமாயிற்று. பின்னும் நான் ராஜாவைப்பார்த்து- ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், நான் யூதா தேசத்துக்குப் போய்ச்சேருமட்டும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு அவர்களுக்குக் கடிதங்கள் கொடுக்கும்படிக்கும், தேவாலயத்துக்கு இருக்கிற அரணின் கதவு வேலைக்கும், நகரஅலங்கத்தின் வேலைக்கும், நான் தங்கப்போகிற வீட்டின் வேலைக்கும் வேண்டிய மரங்களை ராஜாவின் வனத்துக் காவலாளனாகிய ஆசாப் எனக்குக் கொடுக்கும்படிக்கும், அவனுக்கும் ஒரு கடிதம் கட்டளையிடப்படுவதாக என்றேன். என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார்”

இங்கு நெகேமியா, மேதோபெர்சிய இராஜாவாகிய அர்த்தசஷ்டாவினிடத்தில் பானபாத்திரக்காரராக எப்பொழுதும் இராஜ சமூகத்தில் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். நெகேமியா துக்கமாயிருப்பதை கண்ட ராஜா, காரணம் கேட்டபொழுது, அவரை சந்திக்க வந்தவர்கள்மூலம்,பரிசுத்த நகரமாகிய எருசலேம் பாழடைந்த நிலையில் உள்ளதைக் கேள்விப்பட்டதே காரணம் என்றுரைத்தார்(நெகேமியா 1:2-4)

இந்த சம்பவங்களைக் கேட்ட ராஜா நெகேமியாவிடம், நீ என்னிடத்தில் வேண்டிக்கொள்ள விரும்புவது என்ன? என்று கேட்டார். அப்பொழுது நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம் பண்ணின பின்பு,
எருசலேமின் மதில்களைஎடுப்பித்து கட்டுவதற்கான அனுமதியை இராஜாவிடம் வேண்டினார். அவருடைய வேண்டுதல் கேட்கப்பட்டு, அந்த வேலை செய்வதற்குத் தேவையான பொருட்களையும், அனுமதி சீட்டையும்கொடுத்து நெகேமியாவை அனுப்பினார்.

## இதுவே தானியேல்9:25ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையாகும்

இது அர்த்தசாஷ்டா இராஜா ஆளுகைக்கு வந்த ‘இருபதாம் வருடத்தில்” நடந்ததை நாம் கவனிக்கலாம். அந்த வருடம் உலக சரித்திரத்தில் கிமு 474ல் துவங்கினதாக பதிவாகியுள்ளது. அப்படியிருக்க, ‘இருபதாம் வருடம்” என்பது கிமு 454 எனகணக்கிடப்படுகிறது. (கிமு-வில் காலத்தை பின்னோக்கி கணக்கிடுவதால், கழிக்கவேண்டும்). இதுவே இந்த கால தீர்க்கதரிசனம் துவங்கும் நாளாக இருக்கிறது. இதை அறிந்த பின்பு, மீண்டும் தீர்க்கதரிசனத்திற்குத் திரும்புவோம்

**தானியேல் 9:25**

‘இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், எருசலேமைத் திரும்பஎடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியாவருமட்டும் ஏழு வாரமும் அறுபத்திரண்டு வாரமும் செல்லும்

அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும். ஆனாலும்
இடுக்கமான காலங்களில் இப்படியாகும்"

இங்கு 'மேசியா வருமட்டும்" என்பது எதைக் குறிக்கும்? இது இயேசுவின் பிறப்பைக் குறிக்காமல், அவரது 30வது வயதில் ஞானஸ்நானம் எடுத்தபோது 'மேசியாவாக" அல்லது அபிஷேகம் பெற்றவராக மாறினதைக் குறிக்கும்.

**யோவான் 3:34**

'தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்.தேவன்
அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்"

இவ்விதமாகஇந்த கால தீர்க்கதரிசனத்தின் துவக்கத்தையும் முடிவையும் கண்டுபிடித்துள்ளோம்.

இதை இப்பொழுது விரிவாகப் பார்ப்போம்.

7 X 7 = 49 நாட்கள்
62 X 7 = 434 நாட்கள்

ஆகவே 69 வாரங்கள் = 483 நாட்கள்

இவ்விதமாக 69 வாரங்களும், 483நாட்களைக் கொண்ட காலப்பகுதியைக் குறிக்கும். இவைகள் சாதாரணமாக எண்ணப்படும் 24 மணி நேரங்களைஉள்ளடக்கிய நாளாக அல்லாமல்,தீர்க்கதரிசன நாள் என்று அழைக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு நாள் என்பது நமக்கு 1000வருடங்கள்(2பேதுரு3:8) என்பதுபோல இதுவும் ஆகும். அவ்வாறே 'தீர்க்கதரிசன நாள்"என்பதற்கும் வேதத்தில் ஒரு கணக்கீடு உள்ளது. இதைக் குறித்து வாசிப்போம் -

**எசேக்கியேல்4:6**

'ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொருநாளை உனக்குக்
கட்டளையிட்டேன்"

**எண்ணாகமம் 14:34**

'நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு
நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச்
சுமந்து,என் உடன்படிக்கைக்குவந்த மாறுதலை உணருவீர்கள்"

ஆகவே ஒவ்வொரு 'தீர்க்கதரிசன" நாளானது, சொல்லர்த்தமான ஒருவருடத்திற்கு சமமாக இருக்கிறது.

இவ்விதமாக மேசியா வரையிலான 483 தீர்க்கதரிசனநாட்களும், சொல்லர்த்தமான 483வருட காலத்தைக் கொண்டதாக இருக்கிறது.

இவ்வாறு இயேசுவின்'ஞானஸ்நானநாளை" பின்வருமாறு கணக்கிடுகிறோம் -

| 483 | ----- | கிமு 454 ⇨ கிபி 29 |
|---|---|---|
| மேசியா வருமட்டும் சொல்லர்த்தமான '69வாரங்களின்" கணக்கிடல் | | தீர்க்கதரிசனம் துவங்கும் வருடம் |

ஆகவே தீர்க்கதரிசனத்தின் '69 வார காலமானது கிமு454இல் துவங்கி, இயேசு ஞானஸ்நானம் பெற்ற வருடமாகிய கிபி29 வரை நீடிக்கிறது.

இனி தீர்க்கதரிசனத்தின் கடைசி வாரம் - அதாவது 70 வது வாரத்தைக் குறித்து வாசிப்போம்

**தானியேல் 9:27**

'அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதிசென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார். அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்"

இது எதைக் குறிக்கும்? இயேசு தம்மை உலகத்தின் பாவங்களுக்காக கல்வாரியில் ஒப்புக்கொடுத்ததைக் குறிக்கும்( **1தீமோத்தேயு2:6** ).
இந்த உண்மையான பலி ஒப்புக்கொடுத்த பின்பு, தேவன் தாம் இதுவரை அங்கீகரித்துவந்த நிழலான பலிகளையும் காணிக்கைகளையும் ஒழியப்பண்ணினார்.இதை கீழ்க்காணும் வசனத்தின் மூலம் உறுதிப்படுத்தலாம் -

**எபிரேயர் 10:11,12**

'அன்றியும் எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும் பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து.."

'அந்த வாரம் பாதி சென்றபிறகு.." - இது 3½ தீர்க்கதரிசன நாட்களை அதாவது சொல்லர்த்தமான 3½ வருடங்களைக் குறிக்கும்.
இதன் மூலம் இயேசு மரித்த வருடம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது -

**கிபி 29 + 3½ - கிபி 33**

உண்மையாகவே இயேசு கிபி 33ஏப்ரல் 3ம்தேதி வெள்ளிக்கிழமை அன்று மரித்தார். இவர் மரிக்கும்போது அவருக்கு வயது 33½ வருடங்கள். இப்படியிருக்க, இயேசு பிறந்த நாள் எது? இதை மிக எளிதாகக் கணக்கிடமுடியும். அவர் மரித்த நாளிலிருந்து ஆறுமாதத்திற்கு முன்பாக அவருடைய பிறந்த நாள் இருக்கும். அப்படிக் கணக்கிடும்போது,

| ஏப்ரல் - | மார்ச் | பிப்ரவரி | ஜனவரி | டிசம்பர் | நவம்பர் | அக்டோபர் |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

ஆகவே இயேசுகிறிஸ்து பிறந்தது அக்டோபர் மாதம் முதலாம் வாரம்.

அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்(**லூக்கா2:8** ). டிசம்பர் மாதத்தில் பெத்லேகேமில் பனிக்காலமாக இருப்பதால் ஆட்டு இடையர்கள் வயல்வெளிகளில் தங்குவது இயலாததாகும்.

இப்படியிருக்க, **டிசம்பர் 25**ம் தேதியில் கொண்டாடப்படும் கிறிஸ்துமஸ் குறித்து வேதவசனத்தில் எந்த ஆதாரமும் இல்லை.

ஆகையால் 'இந்த தீர்க்கதரிசனத்தின் கடைசி வாரம்" அல்லது '70வது வாரம்" பின்வரும் நாட்களைக் குறிக்கிறது -

**இயேசுவின் ஞானஸ்நானம் - கிபி 29**

**இயேசுவின் மரணம் அல்லது 'சங்கரிக்கப்படுவார்" - கிபி 33**

யூதர்களுக்கான பரம அழைப்பின் வாய்ப்பு முடிவுக்கு வந்து, புறஜாதிகளுக்கு பரம அழைப்பின் வாய்ப்பு சென்றடைதல்

**முதல் புறஜாதியானாகிய கொர்நெலியுவை பேதுரு சந்தித்தல் - கிபி 36**

**தானியேல் 9:27** இல் கூறப்பட்டிருக்கிற '..அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன்வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்"

இந்த வசனம் தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் NIV-யில் தவறாககொடுக்கப்பட்டுள்ளது. இதன் சரியான மொழிபெயர்ப்பு KJV -மொழிபெயர்ப்பில் பின்வருமாறு காணப்படுகிறது -

'.. அருவருப்பானசெட்டைகளோடே பாழாக்குதல் வந்து இறங்கும். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் தீருமட்டும் அதை பாழாக்குவார் என்றான்"

இதில் கூறப்பட்டிருக்கிற பாழாக்குதல் - இயேசு அறிவித்தபடி இஸ்ரயேல் தேசம் பாழாக்கப்படுவதைக் குறிக்கிறது.

**மத்தேயு23:38** 'இதோ,உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்"

ஆம். 'அவர்"(இயேசு) 'அதை"(இஸ்ரயேல் தேசம்) பாழாக்குவார்.

பாழாக்குவதற்கான காரணம் என்ன? இஸ்ரயேலின் துன்மார்க்கமானது, அவர்களுடைய மேசியாவை புறக்கணித்தது மற்றும் அவர்களுடைய கனியற்ற நிலைமை(லூக்கா13:6-9) ஆகியவற்றால் பாழாக்கப்பட்டது. அது எவ்விதமாக பாழாக்கப்பட்டது என்று பின்வரும் வசனத்தில் விளக்கப்படுகிறது -

**தானியேல் 9:26**

'..அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற

பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது"

இது எருசலேம் நகரமும், ஆலயமும் கிபி69-70ஆம் வருடம் அழிக்கப்படும் என்று முன்கூட்டியே உரைத்த தீர்க்கதரிசனமே இதுவாகும்.அதற்குப் பின்பு யூதர்கள்உலக தேசங்கள் அனைத்திலும் சிதறடிக்கப்பட்டு இஸ்ரயேல் ஒரு தேசமாக இருந்த நிலைமை முடிவுக்கு வந்தது.

**இவ்வசனத்தில்கூறப்பட்ட பிரபு** - ரோம அதிகாரியான தீத்து ராயனைக் குறிக்கும்.

**வரப்போகிற பிரபுவின் ஜனங்கள** - ரோமப் படையையும், ஜலப்பிரவாகம் - யுத்தத்தால் முற்றுகை போடப்பட்டு, வன்முறைக்கு ஆளாகி, மாபெரும் சீரழிவு ஏற்பட்டதைக் குறிக்கும்.

இஸ்ரயேலுக்கான இந்த தண்டனை எது வரை நீடிக்கும்?

இந்த தண்டனைக்கு ஒரு நிர்ணயிக்கப்பட்ட கால அளவு உள்ளது. அதுபற்றி வாசிக்கலாம் -

**எரேமியா 16:18**

'முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன். அவர்கள் என் தேசத்தை தீட்டுப்படுத்தி, என் சுதந்திரத்தைச் சீயென்று அருவருக்கப்படத்தக்க தங்கள் காரியங்களின் நாற்றமான விக்கிரகங்களினாலே நிரப்பினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்"

அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனை **'இரண்டத்தனையாக"** உள்ளது. அதாவது, இஸ்ரயேல் தேசமானது யாக்கோபின் மரணம் துவங்கி, இயேசுவின் வருகை மட்டும்பெற்ற ஆசீர்வாத காலத்தின் வருட எண்ணிக்கைக்கு சரி நிகரான காலமாக இருக்கும்.

இவ்விதமாக, கால தீர்க்கதரிசனங்களை புரிந்துகொள்வதற்கான முக்கியமான திறவுகோல்களில் சிலவற்றை, இந்த காலதீர்க்கதரிசனத்திலிருந்து அறிந்தோம்.

**திறவுகோல் - 1**

வேதாகம கால தீர்க்கதரிசன கணக்கீடுகள், சில கணக்கீட்டு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது

**திறவுகோல் - 2**

'தீர்க்கதரிசன நாள்" என்பது ஒரு வருடத்திற்கு இணையாக உள்ளது.

அடுத்ததாக , கால தீர்க்கதரிசனங்களை புரிந்துகொள்வதற்கான **மற்ற திறவுகோல்களை இரண்டாவது 'கால தீர்க்கதரிசனம்"** பற்றிய இன்றைய ஆராய்ச்சியில் காண்போம் -

## 2. புறஜாதியாரின் காலங்கள்

இது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடுகின்ற ஒரு 'கால தீர்க்கதரிசனம்".

**லூக்கா 21:24**

'பட்டயக் கருக்கினாலே விழுவார்கள். சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்



போவார்கள். புறஜாதியாரின்காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்”

இந்த தீர்க்கதரிசனக் காலமானது ‘புறஜாதிகளின் காலங்கள்” என்றழைக்கப்படுகிறது. இவ்வசனத்தில், எருசலேம் என்பது இஸ்ரயேலை அடையாளப்படுத்துகிறது(**மத்தேயு 23:37**). இத்தீர்க்கதரிசனம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும் அல்லது ஆளுகை செய்யப்படும்.

‘புறஜாதியாரின் காலங்கள்” என்ற இந்த தீர்க்கதரிசனக் காலம் எதைக் குறிக்கிறது? இதன் காலத்தின்அளவு அல்லது நாட்கள் எவை? இங்கு ‘காலங்கள்” என்ற வார்த்தையானது, கைரோஸ் (KAIROS-Strongs concordance no:2540) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ற காலம், ஏற்றவேளை எனும் பொருளை கொண்டுள்ளது. இஸ்ரயேல் தேசத்தைஆளும் புறஜாதிகளுக்கு ஒரு துவக்கமும், முடிவும் இருக்கவேண்டும்.அது எப்பொழுது என்று காண்போம். தேவன் தம்முடைய நிழலான இராஜ்யத்தை இஸ்ரயேலில் ஸ்தாபித்திருந்ததை நாம் பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் -

**Strong’s Concordance**

**G-2540. kairos, kahee-ros';**

of uncert. affin.; an occasion, i.e. set or proper time:--X always, opportunity, (convenient, due) season, (due, short, while) time, a while. Comp. G-5550.

**1நாளாகமம்29:23**

‘அப்படியே சாலொமோன்தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் இராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாயிருந்தான்”

இவ்வாறாக, இஸ்ரயேலின் இராஜாக்கள் மற்றும் சாலொமோன் இராஜாவுக்கு பின்வந்த யூதா தேசத்தின் இராஜாக்களும், கர்த்தருடைய நிழலான இராஜ்யத்தின் சிங்காசனத்தின்மேல் சில காலம் அமர்ந்து, யூதாவின்கடைசி இராஜாவும் துன்மார்க்கனுமான - சிதேக்கியா வரையில் அரசாண்டனர். இவரைக் குறித்து வாசிக்கையில் -

**எசேக்கியேல் 21:25-27**

‘இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ளதுன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்திற்கு முடிவு வரும் காலத்தில்உன் நாள் வந்தது. பாகையை கழற்று,கிரீடத்தை எடுத்துப்போடு,அது இனி முன்போலிராது. தாழ்ந்தவனைஉயர்த்தி, உயர்ந்தவனை தாழ்த்துவேன். அதை கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன் கவிழ்ப்பேன். உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும். அவருக்கே அதை கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் “

இங்கு ‘அவர்” என்பது மேசியாவைக் குறிக்கும். வரப்போகிற தேவனுடைய நிஜமான ராஜ்யத்தின் அதிகாரம் மற்றும் ஆளுகையை இயேசு பெற்றுக்கொள்வார் என்று நாம் வாசிக்கிறோம் -

**தானியேல் 7:13**

'இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில்,இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார், அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்"

ஆனால் இடைப்பட்ட காலத்தில் இஸ்ரயேல் தேசமானது **'புறஜாதிகளிடத்தில்"** மிதிக்கப்படுவதற்காக" ஒப்புக்கொடுக்கப்படும்.

ஆனால் நம்முடைய கேள்வி என்னவென்றால், ஏன் இஸ்ரயேல் மிதிக்கப்படவேண்டும்? இது எவ்வளவு நாள் நீடிக்கும்?

தேவன் தம்முடைய தூதுவர்களின் மூலம் இஸ்ரயேல் தேசத்தை அவர்களுடைய நடத்தையினிமித்தம் எச்சரித்தார்.ஆனால் அவர்களோ அசட்டை செய்ததை வசனத்தில் வாசிக்கலாம் -

**2நாளாகமம் 36:16**

'ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது. சகாயமில்லாமல் போயிற்று"

இவ்விதமாக இஸ்ரயேலின் மீதான இறுதி தண்டனை பதிவுசெய்யப்பட்டுள்ளதை நாம் வாசிக்கலாம்-

**'லேவியராகமம் 26:18,21,24,28**

'இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும்,இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால்,உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து.. நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன்"

இங்கு கூறப்பட்டுள்ள **'ஏழத்தனையாய்"** என்பது எதைக் குறிக்கும்? இது**'Paamah**(பாமா)" என்ற எபிரேய பதத்திலிருந்து வருகிறது(ஸ்ட்ராங்ஸ் அகராதி, எண்: 6471). இதற்கு '**ஒரு அடி(a Stroke) அல்லது 'மடங்கு அல்லது காலம்** (time)" என ஏழு மடங்கு தண்டிப்பது போன்ற பொருளை தருகிறது.

**Strongs concordance**

**Result of search for "6471"**:

6471 pa`am pah'-am or (feminine) pa;amah {pah-am-aw'}; from 6470; a stroke, literally or figuratively (in various applications, as follow):--anvil, corner, foot(-step), going, (hundred-)fold, X now, (this) + once, order, rank, step, + thrice, ((often-)), second, this, two) time(-s), twice, wheel.

ஏழு மடங்கு தண்டிப்பது எப்படி சாத்தியமாகும்? இயேசு இதற்கான பதிலை கூறியிருப்பதை வசனத்தில் காணலாம் -

**லூக்கா 21:24**

'பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள், புறஜாதியாரின்காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்"

இந்த தண்டனையானது குறிப்பிட்ட கால அளவுக்குரியதாக அவர் கூறுகிறார். இந்த தண்டனைக் காலம் என்பது தீர்க்கதரிசன பாஷையில் சொல்லப்பட்டிருப்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

கால தீர்க்கதரிசனத்தின்படி ஒரு மாதத்திற்கு 30 நாட்கள், ஒரு வருடத்திற்கு 360நாட்கள் என்று கணக்கிடவேண்டும். மாறாக ஒரு வருடத்திற்கு 365 1/2நாள் என புரிந்துகொள்ளக்கூடாது. இதற்கு ஆதாரமாக,

**வெளிப்படுத்தல் 12:14**

'ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின்முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும் , அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இர்டு சிறகுகள்அவளுக்குக் கொடுக்கப்பட்டது"

இங்கு இந்த 'காலத் தீர்க்கதரிசனம்" 1 + 2 + ½ காலங்கள் குறித்துப் பேசுகிறது. இது மொத்தமாக 3½'காலங்கள்" ஆகும். இந்த 3½ காலங்களுக்கு உரிய விளக்கம் இதே அதிகாரத்தில் காணப்படுகிறது -

**வெளிப்படுத்தல் 12:6**

'ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள், அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப்போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது"

மேற்கண்ட இரண்டு வசனங்களும் ஒரே காரியத்தைக் குறிக்கின்றன. ஆனால் ஒரே காலஅளவை வேறுபட்ட விதத்தில் வெளிப்படுத்துகின்றன -

3½ காலம் = 1260 நாட்கள்

மேலும் இதே தீர்க்கதரிசனக் காலம் மறுபடியும் குறிப்பிடப்பட்டுள்ளதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**வெளிப்படுத்தல் 13:5**

'பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய்அதற்குக் கொடுக்கப்பட்டது. அல்லாமலும் நாற்பத்திரண்டு மாதம் யுத்தம் பண்ணஅதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது"

இந்த 'நாற்பத்தி இரண்டு" மாதமும் கீழே கணக்கிடப்பட்டுள்ளபடி 31/2மாதங்களுக்கு சமமாகும்

12 + 12 + 12 + 6 = **42மாதங்கள்**

இதன்மூலம், **'தீர்க்கதரிசன பாஷையில்" ஒரு காலம் (அ) மடங்கு** என்பது ஒரு வருடம் என்று நாம் புரிந்துகொள்கிறோம். தீர்க்கதரிசனபாஷையில் ஒரு வருடம் என்பது பின்வருமாறு

கணக்கிடப்படுகிறது -
ஒருமாதத்தில் உள்ள நாட்களைக் கணக்கிட நாம் 1260 நாட்களடங்கிய காலஅளவை42 மாதத்தினால் வகுக்கவேண்டும்.
இவ்வாறு கணக்கிடுகையில், **1260 / 42 = 30.**
ஒவ்வொரு தீர்க்கதரிசன மாதமும் 30 நாட்களை உடையதாக கணக்கிடப்படுகிறது.இதன் மூலம் ஒரு வருடம் என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

**30 x 12 = 360 'நாட்கள்"**

ஆனால் இந்த கால தீர்க்கதரிசனம் 1காலம் அல்லது மடங்கு அல்ல, மாறாக ஏழு காலம்அல்லது மடங்கு ஆகும். அதாவது 360x 7= 2520 நாட்கள்ஆகும். எசேக்கியேல் 4:6 மற்றும் எண்ணாகமம் 14:34ல் நாம் பார்த்தபடி 'ஒவ்வொரு வருஷத்திற்குப் பதிலாக ஒவ்வொரு நாள் என கணக்கிடப்படுகிறது.

**ஆகையால் 2520 தீர்க்கதரிசன நாட்கள் = 2520 சொல்லர்த்த வருடங்கள் ஆகும்.**

இந்த 2520 நாட்கள் என்ற சொல்லர்த்த வருடங்கள் அல்லது ஏழு காலங்கள் தேவன் இஸ்ரயேல் மீது அனுமதித்த புற ஜாதியாரின் ஆளுகைக்குரிய காலம் என்றும், அது பின்வருமாறு துவங்கினதையும் வாசிக்கிறோம்.

**1நாளாகமம்36:17**

'ஆதலால் அவர் அவர்கள்மேல் கல்தேயரின் ராஜாவை வரப்பண்ணினார்.அவன் அவர்கள் வாலிபரைஅவர்களுடைய பரிசுத்தமான ஆலயத்திலே பட்டயத்தினால் கொன்று, வாலிபரையும் கன்னியாஸ்திரீகளையும் முதியோரையும் விருத்தாப்பியரையும், தப்பவிடவில்லை. எல்லாரையும் தேவன் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்"

இஸ்ரயேல் மற்றும் உலகத்தை ஆண்டு முதல் புறஜாதி இராஜா கல்தேயர்அல்லது பாபிலோனின் இராஜாவாகிய நேபக்காத்நேச்சார் ஆவார். இது கிபி 606ம் வருடம் நிகழ்ந்தது.

பின்பு பாபிலோனிய சாம்ராஜ்யத்தைத் தொடர்ந்து, வேறு மூன்று புறஜாதி ராஜாக்கள் இஸ்ரயேல் மற்றும் உலகத்தை ஆண்ட புறஜாதி வல்வரசுகளாகும். மேலும் இதுவே லேவியராகமம் 26ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழத்தனையான தண்டனையின் பொருளாகும். அந்த புறஜாதி இராஜ்யங்களும், அவை ஆளுகை செய்யும் காலமும் பின்வருமாறு குறிக்கப்படுகிறது

1. **பாபிலோனிய சாம்ராஜ்யம் - கிமு 606 இல் துவங்கி கிமு 538 வரை ஆண்டது**
2. **மேதோ - பெர்சிய சாம்ராஜ்யம் - கிமு 538 துவங்கி கிமு 331 வரை ஆண்டது**
3. **கிரேக்க சாம்ராஜ்யம் - கிமு 331துவங்கி கிமு 160 வரை ஆண்டது**
4. **ரோம சாம்ராஜ்யம் - கிமு160இல் துவங்கி கிபி476 வரை ஆண்டது**

இந்த கடைசியான ரோம சாம்ராஜ்யம் விநோதமாக விளக்கப்பட்டுள்ளது -

**தானியேல் 2:33**

'அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி

களிமண்ணுமாயிருந்தது"

சிலை - தானியேல் 2




இங்கு 'இரும்பு" மற்றும் 'களிமண்" கலந்திருக்கும் அடையாளமானது, ரோம சாம்ராஜ்யம் கிபி 476 க்கு பின், மதம்-அரசியல் கூட்டணியில் உண்டான 'பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தை" அடையாளப்படுத்துகிறது.
இது படிப்படியாக துவங்கிபோப் 3ம் லியோ - சார்லமேன் ராஜாவை சக்கரவர்த்திக்கும் மேலான தலைமை சக்தியாக போப்பிற்கு உட்பட்ட பிரான்ஸ்தேசத்தின் முதல் சக்கரவர்த்தியாக நியமித்தபோது முழு வல்லமைபெற்றது.

இந்த மகா வல்லமை கிபி 1799 வரை பிரயோகிக்கப்பட்டது. அப்பொழுது அதே பிரான்ஸ் தேசத்திலிருந்து எழும்பிய நெப்போலியன் போனபார்ட், போப்பின்ஆளுகையை முடிவுக்குக் கொண்டுவந்து, அப்போதைய போப்பாக இருந்த போப் பயஸ் - சை சிறையிலடைத்தார். அங்கு அவர் மரித்தார்.
இதன்மூலம் உலக வரலாற்றில்'இருண்டயுகம்" என்றழைக்கப்பட்ட ஆளுகை முடிவுக்கு வந்தது.

பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட பிரான்சின் கடைசி சக்கரவர்த்தியாக இருந்த 11 பிரான்சிஸ், அந்த பட்டத்தை 1806ம் வருடம்துறந்தார்.
பின்பு முழு உலகத்தையும் 'புறஜாதியாரின் ஆளுகை" காலனி ஆதிக்கத்தின் மூலம் தொடர்ந்ததை 10 விரல்கள் குறிக்கிறது.

இவை ஐரோப்பாவின் தேசங்களாகும். இவை முன்பிருந்த பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின்பகுதியாக இருந்து , தற்போதுகிறிஸ்துவின்இராஜ்யம் என்று பறைசாற்றுகின்றன.


ஆகையால், இந்த'புறஜாதியாரின் காலங்கள்" எப்பொழுது முடிவுக்கு வருகிறது?

2520 - 606 - கிபி1914

ஏழத்தனையான காலஅளவு — கிமுவில் துவங்கி

புறஜாதியாரின் ஆளுகைக்காலம் 1914ம் வருடம், ஆகஸ்ட் மாதம் முடிவுற்றது. இந்த முடிவு, ஐரோப்பாவில் நடந்த முதலாம் உலகப்போர் குறித்தது.

இந்த கால தீர்க்கதரிசனத்தின்மூலம் கால தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்வதற்கானவேறு சில திறவுகோல்களை நாம் கற்றிருக்கிறோம் -



**திறவுகோல் - 3**

ஒரு தீர்க்கதரிசன மாதம்என்பது 30 தீர்க்கதரிசன நாட்களை உள்ளடக்கிய காலமாகும்

**திறவுகோல் - 4**

தீர்க்கதரிசன வருடம் என்பது 360 தீர்க்கதரிசன நாட்களை உள்ளடக்கிய காலமாகும்

**திறவுகோல் - 5**

கால தீர்க்கதரிசனத்தில், 'காலம்" என்ற வார்த்தை - '360 தீர்க்கதரிசன நாட்களை" உள்ளடக்கிய ஒரு தீர்க்கதரிசன வருடத்தைக் குறிக்கிறது.இது சொல்லர்த்தமான360 வருடங்கள் கொண்ட காலப்பகுதியாகும்.

கால தீர்க்கதரிசனங்களைப் புரிந்து கொள்வதற்காக நாம் ஆராய்ந்த சில முக்கியமான திறவுகோல்கள், வேதத்திலுள்ள முக்கியமான கால தீர்க்கதரிசனங்களை வரப்போகும் வகுப்புக்களில் ஆராய்வதற்கு பெரும் உறுதுணையாயிருக்கும்.

தேவன் தாமே நம் அனைவருக்கும் கிருபை அளிப்பாராக ஆமென்.



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/